வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    27.10.2025 திங்கட்கிழமை    இதழ் : 300    பக்கங்கள் : 08


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கு போன்று தெற்குக்கும் நிர்வாக பரவலாக்கம் வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சொல்கிறது

கொழும்பு, ஒக்ரோபர் 27

“வடக்கு மக்களைப் போன்றே தெற்கு மக்களுக்கும் நிர்வாக பொறிமுறை பரவலாக்கப்படவேண்டும்”, என்று வலியுறுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், “ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் தனிநபராக மாகாண சபைகளை ஆட்சி செய்வது முற்றுமுழுதாக அவற்றின் அதிகாரத்தை பலவீனப்படுத்தும்”, என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், அரசாங்கத்துக்கு அச்சமில்லை என்றால் 2026 முதல் காலாண்டுக்குள் மாகாண சபைகள் தேர்தலை நடத்திக் காட்ட வேண்டும் என்று சவால் விடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சி பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் கொல்லப்பட்டமை தொடர்பில் எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்காமல் அவர் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விமர்சித்திருக்கின்றார். அதனை முற்று முழுதாக அரசாங்கத்தின் நிலைப்பாடாகவே நாம் பார்க்கிறோம்.

உண்மையில் அவருக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பு உள்ளது என்றால், இ வரை காலமும் ஏன் அவர் கைது செய்யப்படவில்லை? பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச்சூடுகளை நடத்தி மோதிக்கொள்வதில் தமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை என்றவாறு தான் அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எதிர்க்கட்சியிலிருந்தபோது,

07

# நீண்டநேர மின் துண்டிப்பால் வடக்கு மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக். 27

வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் சுமார் 13 மணித்தியாலம் நீடித்த மின் துண்டிப்பால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. அத்துடன், வர்த்தக, தொழில் நடவடிக்கைகளும் பெரி தும் பாதிக்கப்பட்டன.

வடக்கில் மன்னார் மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் நேற்று காலை 6 மணி முதல் மாலை 6.30 மணி வரை மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வவுனியா, மன்னார் 220 கே.வி.

07

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தெற்கில் இன்று நினைவுகூரல்!

கொழும்பு, ஒக். 27

1989இல் தெற்கில் ஜே. வி. பி. எழுச்சியின்போதும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கம்பஹா - சீதுவை - ரத்தொலுகமவில் இந்த நினைவேந்தல் நடைபெறும். இதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க,

07

# சகலரின் உரிமைகளையும் பாதுகாக்கும் ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவோம்

கொழும்பு, ஒக். 27

“சகல குடிமக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற ஓர் ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும்” - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், “எமது அரசாங்கத்தின் நோக்கம் இனத்துவம், மதம், மொழி அல்லது இருப்பிடம் ஆகியவற்றை பொருட்படுத்தாத சகல குடிமகனின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதே யாகும்.

அத்துடன், நாடெங்கும் இருக்கின்ற அச்சுறுத்தலுக்கு உள்ளாகத்தக்க மரபுரிமை தலங்களைப் பாதுகாப்பதற்கு, புதிய தொழில்நுட்பம், டிஜிற்றல் கருவிகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் காலநிலையை மாற்றியமைக்கும் உத்திகள்

07

மாகாண சபைகள் தேர்தல்:

# சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசு விரைந்து செயல்படவில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 27

மாகாண சபைகள் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வுகாண அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எமக்கு தெரியவில்லை. தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் அடுத்த ஆண் டின் முதல் காலாண்டில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல்

07

# ஆசிய நாடுகள் தம்மை தற்காக்க பிராந்திய ஒத்துழைப்பு அவசியம்

## இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு ஐ. எம். எவ். அறிவுரை

புதுடில்லி, ஒக். 27

அமெரிக்காவின் வரி, உலகளாவிய பொருளாதார அதிர்ச்சிகளில் இருந்து தற்காத்துக் கொள்ள ஆசிய நாடுகள் சுங்கமற்ற வர்த்தக தடைகளை குறைக்கவும் பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பை அதிகரிக்கவும் வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

இந்த அறிவுரையானது, தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பொருளாதார மீட்சித் திட்டத்தில் இருக் கும் இலங்கைக்கு மிக

07

# 12 வயதுக்கு உட்பட்டவர்கள் கைபேசி பயன்படுத்த தடை

## அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஒக்.

12 வயதுக்கு உட்பட்டவர்கள் நவீன கைபேசிகளை (ஸ்மார்ட் போன்) பயன்படுத்தத் தடை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே

07

# அமரகீர்த்தி எம். பி. கொலை வழக்கின் தீர்ப்பு ஜனவரியில்

கொழும்பு, ஒக். 27

2022 ஆம் ஆண்டில் கோட்டாபய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உச்சத்தில் இருந்தபோது நிட்டம்புவ நகரில் வைத்து பொலநறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, அவரின் பாதுகாப்பு அதிகாரி இரட்டை கொலை வழக்கின் தீர்ப்பு அடுத்த ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி வெளியிடப்படும் என்று கம்பஹா மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய விசேட நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது.

2022 மே மாதம், நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த

07

# கூட்டு எதிர்க்கட்சிகளின் பேரணி நுகேகொடையில்

கொழும்பு, ஒக். 27

அரசாங்கத்துக்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சிகளின் பேரணி நவம்பர் 21ஆம் திகதி நுகேகொடையில் பிற்பகல் நடைபெறவுள்ளது என்று அறிய வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா பொதுஜன பெரமுன, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 30இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் இந்தப் பேரணியில்

07

# எதிர்க்கட்சிகளின் இணைவு அரசாங்கத்துக்கு சவால் அல்ல

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, ஒக். 27

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எந்தவிதத்திலும் சவாலாக அமையாது என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“எதிர்க்கட்சிகளுக்கு சவால் என்பதாலேயே

07

லசந்த விக்ரமசேகர படுகொலை:

# துப்பாக்கிதாரி உட்பட 7 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஒக். 27

மாத்தறை - வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்ரமசேகர கொலை தொடர்பில் துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, அநுராதபுரம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே நேற்றையதினம் இவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை துணைவேந்தர் பதவிக்கு 6 பேர் விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கு ஆறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று அறியவருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் அடுத்த வருடம் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில், பல்கலைக் கழக பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதற்கான இறுதித் தினம் கடந்த 15ஆம் திகதியாகும்.

இந்த நிலையில், துணைவேந்தர் பதவிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடாதிபதிகள் 4 பேர் உட்பட 6 பேராசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக வட்டாரங்களின் தகவலின்படி,

உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி, கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரன், விஞ்ஞான பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் பு. ரவிராஜன், உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசியர் கு. மிகுந்தன், விஞ்ஞான பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பிறின்ஸ் ஜெயதேவன் ஆகியோர் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித் எ்னர் என அறியமுடிகிறது.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய டிசெம்பர் மாத முற்பகுதியில் நடாத்தப்படவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலையில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகிய வற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார். (ஐ-03)

# நாகபட்டினம் - காங்கேசன் படகு சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 27

வட, கிழக்கு பருவமழை ஆரம்பித்துள்ளதால் இந்தியாவின் நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையேயான படகு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை முன்னறிவிப்பால் நேற்று முதல் நாளை வரை திட்டமிடப்பட்டிருந்த பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று சுபம் படகு நிறுவனம் அறிவித்துள்ளது.

நவம்பர் முதல் வருடாந்திர சேவைகளை இடைநிறுத்துவதற்கு முன்னர், 28ஆம் திகதி வரை படகு சேவையை இயக்க நிறுவனம் திட்டமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பேசாலையில் இரத்த தானம்

மன்னார், ஒக். 27

மன்னார் பேசாலை வெற்றி சிறகுகள் அமைப்பின் ஏற்பாட்டில் பேசாலை பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரத்த தான முகாம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலுமே இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

இதில், ஏராளமான இளைஞர், யுவதிகள் பங்கேற்று இரத்த தானம் செய்தனர். இதில், பொலிஸார், இராணுவத்தினரும் பங்கேற்று குருதிகொடை அளித்தனர். (ஐ)

# மாடுகளை திருடிய மூவர் மடக்கிப்பிடிப்பு

மன்னார், ஒக். 27

மன்னாரில் மாடுகளை திருடிய சந்தேகநபர்கள் மூவரை மக் ள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

மன்னார் - நானாட்டான் - உமாநகரி வீதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருடிய மாடுகளை வாகனம் ஒன்றில் கொண்டு செல்வதற்காக ஓட்டோவில் அந்தப் பகுதியை நோட்டமிட்டுள்ளனர். இந்த நிலையில், அந்த பகுதியை சேர்ந்த இளைஞர்களை கண்டதும் சந்தேகநபர்கள் தப்பியோடினர்.

அவர்களை துரத்திச் சென்ற இளைஞர்கள் மன்னார் தள்ளாடி பெரிய பாலத்தடியில் வைத்துப் பிடித்தனர். இதைத் தொடர்ந்து அவர்கள் மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, திருடப்பட்ட இரு மாடுகள் சந்தேகநபர்களின் தகவலின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# இலங்கையருக்கு மருத்துவ உதவி வழங்குமாறு உயர்நீதிமன்று உத்தரவு

சென்னை, ஒக். 27

தமிழ்நாட்டின் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையருக்கு அடிப்படை மருத்துவ உதவிகளை வழங்க வேண்டும் என சிறை நிர்வாகத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த தனுக ரோஷன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர், தற்போது புழல் மத்திய சிறையில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்டவர்கள் ஒரே சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் சுகாதாரமற்ற உணவு வழங்கப்படுவதாகக் கூறி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதற்கு பழிவாங்கும் விதமாக, தனிமைச் சிறைக்கு மாற்றி அதிகாரிகள் எங்களைக் கொடுமைப் படுத்துகின்றனர் என்று வழக்கு தொடுநர் கூறியிருந்தார்.

இரு நீதியரசர்கள் கொண்ட அமர்வில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள்கூட வழங்கப்படுவது இல்லை பாதிக்கப்பட்டவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

பொலிஸ் தரப்பில் முன்னிலையான கூடுதல் குற்றவியல் சட்டத்தரணி இந்த மனுவுக்கு பதிலளிக்க கால அவகாசம் வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரருக்கு தேவையான மருத்துவ உதவிகளை வழங்க புழல் சிறைத் துறை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர். மேலும், மனுவுக்கு வரும் நவம்பர் மாதம் மூன்றாம் திகதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர். (ஐ)

# நெடுந்தீவில் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் இடர்கள்!

## கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 27

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன என்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் தீவுப் பகுதியில் வீதி அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்த கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில், யாழ்ப்பாண மாவட்டத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, வேலணை, ஊர்காவற்றுறை , காரைநகர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கிடைக்கப்பெற்ற விசேட நிதியானது காலதாமதமாக கிடைத்தமை, கடல் கடந்த போக்குவரத்து மற்றும் இனி வரப்போகும் பருவகால மழை காரணமாக வேலைத்திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன என்றும் அதனடிப்படையில் நெடுந்தீவில் முழுமையாக 3 வீதிகளின் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், அங்கு வேறு வீதிகளை திருத்துவது தொடர்பில் ஆராய்ந்து முடிவு எட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 27

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹைஏஸ் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை - தட்டாதெரு சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஹைஏஸ் தனது பக்கத்திலிருந்து விலகி வந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# ஒன்லைன் மூலம் அபராதம்: பொலிஸாருக்கு செயலமர்வு

வவுனியா, ஒக். 27

போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபராதத்தை ஒன்லைனில் செலுத்துவது தொடர்பான செயலமர்வு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

இதில், வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த போக்குவரத்து பொலிஸார் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து சாரதிகளின செயல்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபாரதங்களை அந்த இடத்திலேயே ஒன்லைன் மூலம் செலுத்தும் நடைமுறை நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனடிப்படையில், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் போக்குவரத்து பொலிஸாருக்கு தெளிவூட்டல் செயலமர்வு நடைபெற்றது.

இதில் வவுனியா - மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்பு கொட்டுவ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ன விஜய முனி, பொலிஸ் அதிகாரிகள், போக்குவரத்து பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10)

# குளவி கொட்டி ஒருவர் மரணம்

நுவரெலியா, ஒக். 27

குளவி கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

நுவரெலியா - பொகவந்தலாவை - கேம்பியன் லின்ஃபோர்ட் தோட்டத்தில் நேற்று புல் வெட்டச் சென்ற தோட்டத் தொழிலாளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே தோட்டத்தைச் சேர்ந்த 69 வயதுடையவராவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.10.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எவ்.பி.ஐ.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இன்னும் முடிச்சுகள் அவிழ்க்கப்படவில்லை என்னும் குரல்கள் அவ்வப்போது இலங்கையில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. கேள்வி - உண்மையிலேயே முடிச்சுகள் அவிழ்க்கப்படவில்லையா அல்லது ஏற்கனவே அவிழ்க்கப்பட்ட முடிச்சுகளின் வழியாக விடயங்கள் நோக்கப்படவில்லையா அல்லது அவ்வாறு நோக்கும் எண்ணம் எவருக்கும் இல்லையா அல்லது உள்ளூர் அரசியலை கவர்ச்சிகரமாகப் பேணிக் கொள்வதற்கான ஒரு கருவியாக இந்த விடயம் நோக்கப்படுகிறதா?

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து, குறித்த தாக்குதலின் சர்வதேச இஸ்லாமியத் தொடர்புகள் அதன் உள்ளக - வெளியக தொடர்புகளை ஆராய்வதற்காக அமெரிக்க உள்ளக புலனாய்வுத்துறையான எவ்.பி.ஐ. இலங்கைக்கு வந்திருந்தது. 75 நாட்களுக்கு மேலாக எவ்.பி.ஐ. குழுவினர் இலங்கையில் தங்கியிருந்து விடயங்களை பல கோணங்களில் ஆராய்ந்திருந்தனர்.

இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கிய – அமெரிக்க புலனாய்வுத் துறையில் சுமார் இருபது வருடங்களுக்கும் மேலான அனுபவங்களை கொண்டிருக்கும் ராஜ் பட்டேல் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் பேசியிருக்கிறார். அவர் தற்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் பேசியிருக்கிறார். தெற்காசியாவிலிருந்து பலர் சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்துகொண்டிருந்த நிலையில், மாலைதீவு மற்றும் இலங்கை அமெரிக்காவின் கவனத்துக்குள் வந்தன. இந்த விடயங்களை ஆராய்வதற்காக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு பட்டேலை நியமித்தது. இவ்வாறானதொரு பின்னணியில்தான், குறித்த தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து ராஜ் பட்டேல் தலைமையிலான குழுவினரை அமெரிக்கா இலங்கைக்கு அனுப்பியிருந்தது. கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான் என்னும் நபர் தலைமையிலான சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்களால் குறித்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை ராஜ் பட்டேல் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். இற்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு பழிவாங்கும் நோக்கில் மேற்குலகத்தவர்களை கொல்வது, குறிப்பாக அமெரிக்கர்களை கொல்வதே இந்தத் தாக்குதலின் பிரதான நோக்கம் என்று பட்டேல் தெரிவித்திருக்கிறார். தாக்குதல் இடம்பெற்றமையைத் தொடர்ந்து, இலங்கையில் தங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட எவ்.பி.ஐ. குழுவின் விரிவான விசாரணைகள் தொடர்பில் பட்டேல் விபரித்திருக்கிறார்.

எவ்.பி.ஐ. இன் விசாரணைகளின்படி, ஈஸ்டர் தாக்குதலில் உள்ளூர் அரசியல் தொடர்புகள் என்னும் விடயமே இல்லை. சஹ்ரான் தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ். இலங்கை குழுவே முற்றிலுமாக இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டிருக்கிறது. அதற்காக எவ்வாறு அவர்கள் செயல்பட்டார்கள், எவ்வாறு வெடிகுண்டு தயாரிப்புக்கான பொருட்களை கொள்வனவு செய்தார்கள் என்னும் அனைத்து விடயங்களையும் அவர் விபரித்திருக்கிறார்.

இலங்கையில் இப்போதும் ஈஸ்டர் தாக்குதல் ஓர் உள்ளூர் அரசியல் விடயமாகவே நோக்கப்படும்நிலையில், குறித்த விசாரணையை முன்னெடுத்த எவ்.பி.ஐ. குழுவின் தலைவர் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் விசாரணைகளின் தேவையை கேள்விக்கு உள்ளாக்குகிறது. இதற்கு பின்னர் அரசாங்கம் எவ்வாறான விசாரணையை முன்னெடுக்க முடியும்? ஒன்றில் அமெரிக்க உளவுத்துறையின் விசாரணை தவறானது - அவர்களை விடவும் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகள் தொடர்பில் விசாரணை செய்யும் வல்லமை இலங்கையிடம் இருக்கிறது என்பதைத்தான் இலங்கை நிரூபிக்க வேண்டும்.

# சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் 600 ஏக்கர் காணியை அபகரிக்க முயற்சி

### மணற்காடு கிராம மக்கள் வேதனை

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, மணற்காடு பகுதியில் 600 ஏக்கர் காணிகளை சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் அபகரிக்கும் முயற்சியை கைவிடுமாறு மணற்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் மணற்காடு கிராம மட்ட அமைப்புகள் நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கற்கோவளத்துக்கும் மணற்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும் மணற்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும் சுற்றுலா தேவைகளுக்காக அபகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. இதனை உடனடியாக கைவிடவேண்டும்.

மணற்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்கு குடியிருக்க காணியில்லாத நிலையில், தனியார்களுக்கு இவ்வாறு காணிகளை வழங்கும் முயற்சி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

எனவே, சம்மந்தப்பட்ட தரப்புகள் உரிய கவனமெடுத்து குறித்த 600 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் - என்றனர். (எ-05)

# காட்டுச் சட்டம் கோலோச்சி பாதாள உலகம் ஆளும் சூழல்

### அரசாங்கம் மீது சஜித் பிரேமதாஸ சாடல்

இரத்தினபுரி, ஒக். 27

மக்கள் ஆதரவில் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள்தான் இன்று சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர். சமூகத்தில் கொலை கலாசாரம் முழு நாட்டையும் ஆக்கிரமித்துள்ளது. பிரதேச சபைத் தவிசாளரால் பொது மக்கள் தினத்தை கொண்டு நடத்தவோ, நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றன. அரசாங்கத்தின் இயலாமையால் இந்த நடவடிக்கைகளைத் தடுக்க முடியாது போயுள்ளது. காட்டுச் சட்டம் கோலோச்சி, பாதாள உலகம் ஆளும் சூழலை இந்த அரசாங்கம் உருவாக்கியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் எப்போதும் மக்களுக்கு பொய்யான எதிர்பார்ப்புகளையே வழங்கி வந்தது. இன்று பொய்களும் ஏமாற்று வேலைகளும் மட்டுமே நடந்து வருகின்றன என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவை வேலைத்திட்டம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் என்பவற்றின் மற்றுமொரு கட்டம் நேற்று முன்தினம் இரத்தினபுரி மாவட்டம்,



இறக்குவானைத் தேர்தல் தொகுதியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நாட்களில் சீரற்ற கால நிலைக்கு மத்தியில், சிரமங்களை எதிர்கொண்ட குறித்த பிரதேச தேவையுடைய மக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளையும் வழங்கி வைத்தார். (எ)

# சீரற்ற காலநிலையால் 29,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 27

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் 7395 குடும்பங்களைச் சேர்ந்த 29,414 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டார்.

இதேவேளை, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவித்தல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

மேலும், இதுவரை கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சி காரணமாக நில்வள கங்கை, கிங் கங்கை, களு கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டங்கள் உயர் மட்டத்தில் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஒக்ரோபர் - 27 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 10
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சஷ்டி




**மேடம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விஜபிகள் உதவுவார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப் படாமல் இருங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். அவசர முடிவுகளை தவிருங்கள். உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்துபோகும். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். நட்பு வட்டம் விரியும். நிம்மதி உண்டாகும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். புது வேலை அமையும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியுள்ளவர்களின் நல்லவர்கள், கெட்டவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**விருட்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். உடல் நிலை பாதிக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். இனிமையான நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் மனம் மாறுவார்கள். புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். சிந்தனை திறன் பெருகும் நாள்.

நெடுந்தீவு உள்ளிட்ட தீவுப்பகுதிகளில்

# வீதி அபிவிருத்தியின்போது ஏற்படும் இடர்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 27

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் தீவுப்பகுதியில் வீதி அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவதில் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்த கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையிலும் யாழ்ப்பாணம் மாவட்ட போக்கு வரத்து தொடர்பான செயற்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. இளங்குமரன் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் ஆகியோரது பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி வேலைகளினுடைய முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 250 மில்லியன் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

விசேட நிதியானது தற்போது கிடைக்கப் பெற்றுள்ளமையாலும், கடல் கடந்த போக்குவரத்து மற்றும் இனிவரப்போகும் பருவகால மழை காரணமாக வேலைத்திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டு வேலணை, ஊர்காவற்துறை மற்றும் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுக்க முடியுமெனவும் ஆனால் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளதாகவும் அதனடிப்படையில் நெடுந்தீவில் முழுமையாக 3 வீதிகளின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்மென தெரிவிக்கப்பட்டது. நெடுந்தீவில் உள்ளே வேறு வீதிகளை புனரமைப்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவு எட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மக்கள் தகவல் வழங்கினால் சட்டநடவடிக்கை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக். 27

வவுனியாவில் அதிகரித்து வரும் மீற்றர் வட்டி மற்றும் போதைப்பொருள் மாபியாவுக்கு எதிராக மக்கள் தகவல்களை எமக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காசோலைகளை பெற்றுக் கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு மிரட்டப்பட்டு சொத்துக்களை இழந்தவர்களும் தொடர்பு கொள்ள முடியும்.

வன்னியின் பல பகுதிகளில் போலியான ஆவணங்கள் மற்றும் போலியான உறுதிகள் மூலம் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ஊடாக தகவல்கள் திரட்டப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்பாடுகளை மேற்கொள்பவர்கள் மற்றும் அந்தச் செயல்பாடுகள் மூலம் சொத்து சேர்த்தவர்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகளை செய்ய முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் உரிய வகையில் விசாரணை நடத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-10)

# சட்டத்தை நிலைநாட்ட பொலிஸார் சட்டவிரோதமாக செயல்பட முடியாது

## சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 27

சட்டத்தை நிலைநாட்டுகின்றோம் என பொலிஸார் சட்டத்தின் எல்லைக்கு வெளியே சென்று சட்டவிரோதமாக செயல்பட முடியாது என தமிழ் தேசிய கட்சியின் தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறீகாந்தா தெரிவித்தார்.

கொடிகாமத்தில் இளைஞன் ஒருவர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறீகாந்தா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

"சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றிச் சென்றார் என 18 வயது உழவியந்திர சாரதி மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில், குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு ஒரு வரையறை உண்டு. அவர்கள் சட்டத்துக்கு கட்டுப்பட்டே சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த வேண்டும். சட்டத்தின் எல்லைகளை தாண்டி, சட்டவிரோதமான முறையில் சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது.

சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றிச் சென்றார் என்றால் அதனை தடுத்து நிறுத்த பொலிஸாருக்கு பல வழிகள் உண்டு. இறுதியாக வாகன சில்லுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கலாம். ஆனால், பொலிஸார் வாகனத்தின் சில்லுகளை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளாது, இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

மனித உயிர்கள் பெறுமதியானவை. அவற்றை கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடுகள் நடத்தி பறிக்க அனுமதிக்க முடியாது. எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் தேவை. அதற்கு பொலிஸார் ஒத்துழைக்க வேண்டும். நீதியை மறைக்காது, விசாரணைகளுக்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (எ-03)

# வள்ளியம்மை பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 27

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 25 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மேற்கத்திய வாத்தியங்கள் முழங்க விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரைகள், கலை நிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல் என்பன நடைபெற்றன.

பாடசாலையின் அதிபர் பொ. சிவறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவசிவா கலந்து சிறப்பித்ததுடன் ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், கல்வி சாரா ஊழியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் தொடர்பில் 1.8 இலட்சம் வழக்குகள் பதிவு

## -2097 துப்பாக்கிகளும் பறிமுதல்-

கொழும்பு, ஒக். 27

நாட்டில் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 672 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில், பொலிஸ், படை தரப்புகள் முன்னெடுத்த நடவடிக்கைளில் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 938 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 60 இலட்சத்து 19 ஆயிரத்து 343 க்கும் அதிகமான நபர்கள் சோதனையிடப்பட்டுள்ளனர்.


கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் வகைகளில், ஐஸ் போதைப்பொருளே அதிகளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 539.5 கிலோகிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக 66 ஆயிரத்து 593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, ஆயிரத்து 482.8 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 130 வழக்குகளும், 14 ஆயிரத்து 434.4 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 724 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 32.6 கிலோகிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டு 91 வழக்குகளும் 30 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு 2 ஆயிரத்து 808 வழக்குகளும் 575 கிலோகிராம் வேறு போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு ஆயிரத்து 474 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருள் தவிர, ரி-56 ரக துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், ரிவால்வர்கள் என 2 ஆயிரத்து 97 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சி, ஜே. வி. பி. ஒப்பந்த நடைமுறை குறித்து பேச்சு



கொழும்பு, ஒக். 27

மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி.), சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் சென்றுள்ள போக்குவரத்து நெடுஞ்சாலை, நகர அபிவிருத்தி அமைச்சராக பிமல் ரத்நாயக்கவும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவு தலைவர் லியு ஹைசிங்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் ஆண்டின் தொடக்கத்தில் இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையில் நடந்த சந்திப்பு மற்றும் அதில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான தற்போதைய முன்னேற்றம், அத்துடன் பேச்சுகளின் வெற்றி குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.

ஜே.வி.பி.க்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அம்சங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டில் 80 ஆயிரம் பாலியல் தொழிலாளர்!

கொழும்பு, ஒக். 27

நாட்டில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான பாலியல் தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்று கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் அனைவரும் பதிவு செய்யப்பட்டு சட்டரீதியான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா வலியுறுத்தியுள்ளார்.

பாலியல் தொழிலாளர் பெண்களை சமூகத்தில் ஒதுக்காமல் மற்றும் புறக்கணிக்காமல் ஒருங்கிணைப்பது குறித்து இலங்கையின் முன்னணி இலத்திரனியல், அச்சு ஊடகவியலாளர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வு ஒன்றிலேயே பேராசிரியர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகள் மூலம் பாலியல் கல்வியை மேலும் பிரபலப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அத்துடன், பாலியல் தொழிலாளர்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் இருக்க வேண்டும் என்றும் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களும் ஆண்களும் சமூகத்தில் ஒருவித அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றும் பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# 200 அடி பள்ளத்தில் விழுந்த மாடு மீட்பு

கொழும்பு, ஒக். 27

200 அடி பள்ளத்தில் விழுந்த மாடு ஒன்று பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

பதுளை, லெஜர்வத்த மீரியகல பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீட்கப்பட்ட மாடு காயமடைந்துள்ள நிலையில் அதற்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வீதி விபத்தில் நால்வர் காயம்

கொழும்பு, ஒக். 27

வெல்லவாய - தனமல்வில பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இரு முச்சக்கர வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது, இரு முச்சக்கர வண்டிகளிலுமாக இரு பெண்கள் உட்பட நால்வர் பயணித்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் வெல்லவாய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் கர்ப்பவதித் தாய் ஒருவரும் அடங்குவார். (ஐ)

# 27,890 பேரிடம் சோதனை!

கொழும்பு, ஒக். 27

குற்றம், போதைப்பொருளை தடுக்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 27 ஆயிரத்து 890 பேர் சோதனையிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேகத்தின் அடிப்படையில் 743 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 253 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 170 கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், மதுபோதையில் வாகனம் செலுத்திய 15 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 13 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்கள் தொடர்பாக 3, 944பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 27

ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் 41, மற்றும் வெடிபொருட்கள், ரவைகள் என்பன அநுராதபுரம், மதவாச்சியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இவற்றை பொலிஸார் மீட்டனர்.

இந்த வெடிபொருட்களை அந்த இடத்திற்கு கொண்டுவந்தவர்கள் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

# பழுதடைந்த கப்பலில் தவித்த 14 கப்பல் பணியாளர்கள் மீட்பு

கொழும்பு, ஒக். 27

நாட்டுக்கு தெற்கே சுமார் 100 கடல் மைல் தொலைவில் ஆழ்கடலில் முக்கிய இயந்திரங்கள் செயலிழந்ததால் ஆபத்தில் சிக்கியிருந்த எம். வி. இன்ரகிரிட்டி ஸ்ரார் என்ற வணிகக் கப்பலின் 14 பணியாளர்கள் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு நேற்றைய தினம் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் கப்பல் அனுப்பப்பட்டு இவர்கள் மீட்கப்பட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் இந்தியா, துருக்கி, அஸர்பைஜான் நாடுகளை சேர்ந்தவர்களாவர். கப்பலும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கட்டளையை மீறி சென்ற வான்மீதே துப்பாக்கிச்சூடு

## இரத்மலானை சம்பவம் தொடர்பில் பொலிஸ் விளக்கம்

கொழும்பு, ஒக். 27

இரத்மலானையில் நேற்று முன்தினம் கட்டளையை மீறி பயணித்த வானின் மீதே பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

வானை கைவிட்டு தப்பிச் செல்ல முயன்றபோது சாரதி சம்பவ இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர் களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருபவை வருமாறு,

பிலியந்தலை, சுவாரபொல பகுதியில் போக்குவரத்து கடமைகளில் இருந்த பொலிஸாரின் உத்தரவை மீறி வான் ஒன்று இரத்மலானை நோக்கிப் பயணித்துள்ளது.

வானை துரத்திச்சென்ற பொலிஸார் இரத்மலானை, பெலேக்கட சந்திக்கு அருகில் வைத்து வானின் ரயரை குறி வைத்து சுட்டனர். இதன்போது, பல வாகனங்களில் மோதி வான் விபத்துக்கு உள்ளானது. அந்த சமயம் வானின் சாரதி தப்பிச் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

அவர் கீழே விழுந்ததால் காயமடைந்தார். இதையடுத்து, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# செயற்கை நுண்ணறிவு பயன்பாடு இலங்கையில் வேகமாக அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 27

இலங்கை உட்பட தெற்காசியாவில் செயற்கை நுண்ணறிவின் (ஏ. ஐ.) பயன்பாடு வேகமாக அதிகரித்துள்ளது என்று உலக வங்கி தனது அறிக்கையில் காட்டியுள்ளது.

தெற்காசியாவில் தொழிலாளர் சந்தையில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேபாளம், இந்தியாவுடன் ஒப்பிடும்போது பூட்டானும் இலங்கையும் ஏ. ஐ.யை பயன்படுத்தும் அதிக பணியாளர்களை கொண்ட நாடுகளாக உருவெடுத்துள்ளன.

எனினும், தெற்காசிய நாடுகளில் ஏ. ஐ. மனித நிரப்பியாக அதாவது மனித திறன்களுடன் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதில் இலங்கை குறைந்த இடத்தில் உள்ளது. திறன்களை மேம்படுத்தாமல் ஏ. ஐ. பயன்பாடு விரைவுபடுத்தப்பட்டால் வேலை இழப்புகள் ஏற்படும் என்றும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

இலங்கையில், ஏ. ஐ. தொடர்பான வேலைவாய்ப்பு சந்தை, தெற்காசியாவில் உள்ள மற்ற நாடுகளை விட வேகமாக விரிவடைந்து வருகிறது, மேலும் 2025ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள அனைத்து தொழில்முறை மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் 7.3 சதவீதத்திற்கு ஏ. ஐ. தொடர்பான திறன்கள் தேவைப்பட்டுள்ளன.

இது பிராந்தியத்திலேயே அதிகபட்ச பங்கு என்றும், இந்தியாவில் இது 5.8 வீதத்தை தாண்டுகிறது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், சற் ஜி.பி.ரி. பயன்பாட்டில் இலங்கை தெற்காசியாவில் இரண்டாவது அதிக தனிநபர் கொண்ட நாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில், மாலைத்தீவு முதலிடத்தில் உள்ளது. (ஐ)

# சீரற்ற காலநிலையால் 29 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 27

கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 7 ஆயிரத்து 395 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 29 ஆயிரத்து 414 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான மழை வீழ்ச்சியால் 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கைகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட ஆய்வாளர் வசந்த சேனாதீர அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரப்பத்தனை காணி எனது தனிப்பட்ட சொத்து

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய விளக்கம்

நுவரெலியா, ஒக். 27

நுவரெலியா மாவட்டம் அக்கரப்பத்தனை பிரதேசத்தில் நான் கையகப்படுத்தியதாகக் கூறப்படும் காணி எனது தனிப்பட்ட சொத்தாகும். அதற்கான ஆதரங்கள் என்னிடம் இருக்கின்றன. அது சட்ட விரோதமாக அபகரிக்கப்பட்ட காணி அல்ல. தனிப்பட்ட ரீதியில் நான் கொள்வனவு செய்த காணியாகும் என முன்னாள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அக்கரப்பத்தனையில் எனக்கு இருப்பதாகக் கூறப்படும் காணி கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் தனிப்பட்ட ரீதியில் நான் கொள்வனவு செய்த இடமாகும். அதில் மறைப்பதற்கு எந்தவொரு இரகசியமும் இல்லை. ஆனால், ஆளுங்கட்சியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு இது தொடர்பில் தவறான தகவலே கிடைக்கப் பெற்றுள்ளது.

அரசியலுக்கு வர முன்னரே நான் பெருந்தோட்டத் துறை சார் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றேன். அது எனது பரம்பரை தொழிலாகும். அந்த வகையிலேயே அக்கரப்பத்தனை பிரதேசத்தில் நான் குறித்த காணியை கொள்வனவு செய்திருக்கின்றேன். அது எனது தனிப்பட்ட சொத்தாகும். அதில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. எனவே, அது குறித்த முழுமையான தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமின்றி ஊடகங்களும் இது குறித்து அவதானம் செலுத்த வேண்டும். தகவல்களின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட ரீதியில் நபரொருவர் குறித்த தகவல்களை வெளியிடும் போது மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டும்- என்றார். (எ)

# லிந்துலையில் கார் விபத்து



ஹற்றன், ஒக். 27

ஹற்றன் - நுவரெலியா வீதியில் தலவாக்கலை-லிந்துலை பகுதியில் கார் ஒன்று வழுக்கி விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்பட வில்லை, கார் மட்டுமே சேத மடைந்தது.

மத்திய மலை நாட்டில் தற்போது நிலவும் மோசமான வானிலை காரணமாக, இந்தப் பகுதியில் உள்ள வீதிகள் வழுக்கும் தன்மை கொண்டதாகவும் வீதி சரியாகத் தெரியாததாலும் இந்தப் பகுதியில் பல்வேறு விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

அனைத்து சாரதிகளும் இந்த நிலைமைகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.(எ)

# "அரசியல் ஆதாயங்களுக்காக நல்லவற்றை எதிர்க்கக்கூடாது"

கல்முனை, ஒக். 27

ஜனாதிபதி எமது நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்க முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் பாராட்டும் விதமாக இருக்கிறது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகமாகி வந்த போதைப் பொருள் பாவனையை ஒழித்து மாணவர்கள் சிறந்த கல்வியை கற்க யுத்த களத்தில் நின்று போராடுவது போன்று அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அரசியல் ஆதாயங்களுக்காக நல்லவற்றை எதிர்க்கக் கூடாது என முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், கல்முனையில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இந்த போதை ஒழிப்பு நடவடிக்கையால் எமது மாவட்டமும், எமது பிரதேசங்களும் நன்மையடைந்துள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பற்றி பெரிய அளவில் கவலையில் இருந்தார்கள். இன்று அவர்களின் கவலை நீங்கி நிம்மதியடையும் நிலை உருவாகியுள்ளது. பிள்ளைகள் 100 சதவீதம் கல்வியில் கவனம் செலுத்தும் போது பிழையான பாதையில் பயணிக்க மாட்டார்கள். இன்றைய நவீன உலகில் செயற்கை நுண்ணறிவில் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதனால் வீட்டிலிருந்தவாறே சம்பாதிக்கும் காலம் உருவாகியுள்ளது.

கல்வி மற்றும் தொழில் புரட்சியால் எதிர்காலத்தில் அதிக நன்மையடையும் வகையில் கல்வித்திட்டங்கள் மாறப்போகிறது. நாங்கள் மாற்று அரசியல் பயணத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களை பாராட்டி தான் ஆக வேண்டும். அரசியல் ஆதாயங்களுக்காக முட்டாள்தனமான கருத்துக்களை பொது வெளியில் விதைக்கக் கூடாது.

நல்ல விடயங்கள் நல்லது என்றே கூறவேண்டும். அதே நேரம் சமூகம் சார் அநீதிகள் இடம்பெறும் போது அது ஜனாதிபதி என்றாலும் சரி எந்தத் தலைவராக இருந்தாலும் அநீதிக்கு எதிராக நாம் போராட வேண்டும்- என்றார். (எ-06)

# மினி சூறாவளியால் 68 வீடுகள் பாதிப்பு

மட்டக்களப்பு, ஒக். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடன் மினி சூறாவளி வீசியதால் 68 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசி எறியப்பட்டு சேதமடைந்துள்ளதுடன் வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். அத்தோடு, மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் சில மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் எம். சியாட் தெரிவித்தார்.

இந்த மினி சூறாவளியால் ஆரையம்பதி, காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதூர் சேத்துக்குடா உட்பட பல பிரதேசங்களில் வீடுகளின் ஓடுகள் மற்றும் சீற்றினால் அமைக்கப்பட்ட கூரைகள் தூக்கி வீசப்பட்டன. ஓடுகள், சீற்றுகள் உடைந்து வீழ்ந்தன.

இதேவேளை வீதிகள் மற்றும் வீடுகளில் இருந்த பாரிய மரங்கள் முடிந்து வீழ்ந்ததுடன் மின்சார கம்பிகள் அறுந்ததையடுத்து சில மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சில மதில்கள் உடைந்து சேதம் ஏற்பட்டது.

இந்த அனர்த்தத்தால் வீடுகள் பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (எ)

# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, ஒக். 27

நாட்டில் தற்போது நிலவும் அதிக மழையுடனான வானிலை காரணமாக விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய முன் எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் நீடித்துள்ளது.

காலி, கண்டி, கேகாலை, யட்டியாந்தோட்டை,

இரத்தினபுரி, இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# திருகோணமலை, மட்டக்களப்பில் இடியுடன் மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, ஒக். 27

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத் தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# கிழக்கு சுகாதார அமைச்சுக்குட்பட்ட திணைக்களங்களின் மீளாய்வு கூட்டம்

திருகோணமலை, ஒக். 27

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்குட்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் 2025 ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலையில் நடைபெற்றது.



இந்தக் கூட்டத்தின் போது மாகாண சுகாதார அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம், சிறைச்சாலை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்புத் துறை, ஆயுர்வேதத் துறை மற்றும் சமூக சேவைகள் துறை ஆகியவற்றின் திட்ட முன்னேற்றம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்கள பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர், அதிகா ரிகள் எனப் பலரும் குறித்த கூட்டத்தில் பங்கேற்றனர். திட்டங்களை நடைமுறைப்ப டுத்தும் போதே எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.



அம்பாறை மாவட்டம், காரைதீவு மாவடி சிறீ கந்தசுவாமி கோவிலில் வருடாந்த கந்தசஷ்டி விரத திருவிழா நடைபெற்று வருகிறது.

(படங்கள்:- வி.ரி. சகாதேவராஜா)

# காத்தான்குடியில் குளத்திலிருந்து மனிதத் தலை மீட்கப்பட்டது!

காத்தான்குடி, ஒக். 27

மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குளம் ஒன்றிலிருந்து மனிதத் தலை மீட்கப்பட் டது.

குறித்த உடல் பாகம் காத்தான்குடி - 5 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவ ரின் தலை என அடையாளம் காணப்பட்டது. மேலும் அவரது உறவினர்-கள் இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த நபர் காணாமல் போனதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடல் பாகம் கண்டுபி டிக்கப்பட்ட பகுதியில் முதலைகள் அடிக்கடி வந்து செல்வதாகவும், இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் அந்த நபர் குறித்த இடத்தில் குளிக்கச் சென்றிருக்கலாம் எனபதும் தெரியவந் துள்ளது.

மேலும் குறித்த நபர் முதலையால் தாக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த உடல் பாகம் பிரேத பரிசோதனைக்காக காத்தான்குடி மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு போன்று

எந்தவொரு பிரஜை கொல்லப்பட்டாலும் அவரின் பின்னணி குறித்து ஆராய்வது தவறு என்றும், யாருக்கும் யாரையும் கொல்வதற்கு உரிமை இல்லை எனவும் தெரிவித்திருந்தார். ஆனால், இன்று அவரின் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர் வெலிகம பிரதேச சபைத் தலைவர் கொல்லப்பட்டமையை நியாயப்படுத்த முயற்சிக்கிறார். அரசாங்கத்தின் பெரும்அழுத்தங்களுக்கு மத்தியிலேயே லசந்த விக்கிரமசேகர வெலிகம பிரதேச சபைத் தலைவராக பதவியேற்றார். அந்த வகையில் தற்போது அவர் கொல்லப்பட்டமை எமக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது?

1988, 1989களில் மனித படுகொலைகளுடன் தொடர்புடையவர் இன்று பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பில் முதல் வரிசையில் அமர்ந்திருக்கின்றனர். ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று நாம் கூறவில்லை. 2022 கலவரத்தின்போது பாராளுமன்றத்தையும் தீக்கிரையாக்க வேண்டும் என்று கூறியவர்களும் அவர்களில் உள்ளடங்குகின்றனர்.

இவர்களுக்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகிறோம். மாறாக அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று நாம் ஒருபோதும் எண்ணவில்லை. அரசாங்கத்தின் தன்னிச்சையான போக்கின் காரணமாகவே இன்று தேசிய பாதுகாப்பு பாரதூரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் இவர்கள் மாகாண சபைகள் தேர்தலையும் நடத்தப் போவதில்லை. கூட்டுறவு தேர்தல்களில் தோல்விகளை எதிர் கொண்டமையை அரசாங்கம் பெரி தாகக் கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால், இப்போது தான் அதன் பிரதி பலனின் தீவிரத்தன்மையை அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமலிருப்ப தற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஆட்சியைக் கைப்பற்ற முன்னர் 6 மாதங்கள் மாத்திரம் அதிகாரத்தை தாருங்கள் என மக்களிடம் கோரினர். ஆனால், அதனைவிட அதிக கால அவகாசத்தை மக்கள் வழங்கியிருக்கின்றனர். எனவே, முடிந்தால் 2026 முதல் காலாண்டில் மாகாண சபைகள் தேர்தலை நடத்திக் காண்பிக்குமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்.

வடக்கு மக்களைப் போன்றே தெற்கு மக்களுக்கும் நிர்வாக பொறிமுறை பரவலாக்கப்பட வேண்டும். நாட்டிலுள்ள சுமார் 10 ஆயிரம்பாடசாலைகளில் சுமார் 300 பாடசாலைகள் மாத்திரமே தேசிய பாடசாலைகளாகும். எஞ்சிய 9000 பாடசாலைகளும் மாகாண சபைகளின் கீழ் இயங்குபவையாகும். இதேபோன்று பல மருத்துவமனைகள் மாகாண சபைகளின் கீழ் இயங்குபவையாகும்.

ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் தனிநபராக இவற்றை ஆட்சி செய்வது முற்றுமுழுதாக மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை பலவீனப்படுத்துவதாகும். எனவே, இவை மக்களுக்கு பொறுப்பு கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகளாலேயே ஆட்சி செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டதால் ஏற்பட்ட சிக்கல்களை அனைவரும் அறிவர். எனவே மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இனியும் மாகாண சபைகள் தேர்தல் காலம் தாழ்த்தப்படக்கூடாது - என்றார்

## காணாமல்...

நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கு மனுக்களும் கையளிக்கப்படவுள்ளன.

1989 ஆம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) எழுச்சியின்போது அதன் செயல்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் காணாமலாக்கப்பட்டனர். இச்சம்பவங்களுக்கு மத்தியில் 1989 ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக வலய ஊழியரும், தொழிற்சங்கவாதியுமான எச்.எம். ரஞ்சித் மற்றும் அவரது சட்டத்தரணி ஆகிய இருவர் கொல்லப்பட்டதன் பின்னர், அவர்களது உடல்கள் சீதுவை - ரத்தொலுகம பகுதியில் கண்டறியப்பட்டன.

இதையடுத்து அவர்களை நினைவுகூரும் வகையில் ரத்தொலுகம சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி, பின்னாளில் தெற்கில் காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூருவதற்கான நினைவுத்தூபியாக மாற்றமடைந்தது. இதன்படி, இன்றைய தினம் அங்கு நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இன்றைய நினைவேந்தலில் பங்கேற்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப ஒன்றியத்தால் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடிதத்துக்கு எவ்வித பதிலும் கிடைக்காததால், தமது கோரிக்கைகளை உள்ளடக்கி இன்றைய தினம் ஜனாதிபதியிடம் மனு ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் அந்த ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, இன்றைய தினம் நீதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டங்களும் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சகலரின்...

ஆகியவற்றை ஒருங்கிணைக்க வேண்டிய தன் அவசியத்தையும் இதன்போது பிரதமர் வலியுறுத்தினார்.

கொழும்பு இலங்கை மன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.

## சட்டச்...

குறித்து வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவறுகளால் மாகாண சபைகள் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்படவில்லை. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட புதிய தேர்தல் முறைமையால் ஏற்பட்ட சட்டச்சிக்கலால் மாகாண சபைகள் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பதில் சிக்கல் ஏற்பட்டது.

மாகாண சபைகள் தேர்தல் முறைமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வியாக்கியானம் கோரப்பட்ட போது பாராளுமன்றத்தின் ஊடாகவே இந்த பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என்று உயர்நீதிமன்றம் பலமுறை அறிவுறுத்தியுள்ளது.

மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களினால் மாகாண சபைகள் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக அம்சங்களுக்கு முரணானது என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். மாகாண சபைகள் தேர்தல் குறித்து இதுவரை காலமும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அரசியல் தரப்பினர் தற்போது விசேட கரிசனை கொண் டுள்ளமை வரவேற்கத்தக்கது. மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு நாட் டில் சட்டம் ஒன்று இல்லை. அடுத் தாண்டு முதல் காலாண்டில் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதாயின் இந்த ஆண்டுக்குள் மாகாண சபை சட்டத்தில் காணப்படும் சட்டச் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டும்.

மாகாண சபைகள் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எமக்கு தெரியவில்லை. தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபைகள் தேர்தலை நடத்தலாம் - என்றார். (ஐ)

## நீண்டநேரம்...

மின் பரிமாற்ற வடத்தை மாற்றியமைப்பதற்கான வேலைகளுக்காகவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மின் துண்டிப்பு குறித்து முன்கூட்டியே அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்ததால் சில வியாபாரிகள் முன்னாயத்த ஏற்பாடுகளை செய்திருந்தனர். எனினும், பல இடங்களில் வர்த்தக நடவடிக்கைகளும் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பலரும் வீட்டில் இருந்தனர். நீண்ட மின் தடையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றிரவு 8 மணி தொடக்கம் நல்லூர், கல்வியங்காடு, இருபாலை உள்ளிட்ட சில பகுதிகளில் சுமார் அரை மணிநேரம் மின்சாரம் தடைப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிதாரி....

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரி என்று சந்தேகிக்கப்படும் நபர் கொழும்பு - மகரகம - நாவின்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

முன்னதாக, துப்பாக்கிதாரியின் மனைவியும் துப்பாக்கிதாரியை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றவரும் அவர்கள் மறைந்திருக்க உதவிய நபருமாக மூவர் அநுராதபுரம் - கெக்கிராவை பகுதியில் நேற்று காலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது துப்பாக்கிதாரி தப்பிச் சென்றிருந்தார் என்று கூறப்பட்டது. அத்துடன், அங்கு கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், 12 இலட்சம் ரூபாய் பணம், ஐஸ் போதைப் பொருள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, இந்தக் கொலை தொடர்பில் மாத்தறை மாவட்டத்திலும் நேற்றைய தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

தவிர, இந்தக் கொலைக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் காலி - ஹியாரே பகுதியில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டார். (ஐ)

## அமரகீர்த்தி...

காலகட்டத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் வீதியில் இறங்கி பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் 2022 மே 9 ஆம் திகதியன்று, ஆளும் கட்சி ஆதரவாளர்கள் கொழும்பில் உள்ள காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கியதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வன்முறை வெடித்தது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள, தமது வாகனத்தில் கொழும்பில் இருந்து பொலநறுவைக்குச் சென்று கொண்டிருந்தபோது, நிட்டம்புவ நகரில் போராட்டக்காரர்களால் வழிமறிக்கப்பட்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மோதலில், அவர் தமது பாதுகாப்பு அதிகாரியுடன் கட்டடமொன்றுக்குள் தஞ்சம் புகுந்தார். பின்னர், அவரும் அவரது பாதுகாப்பு அதிகாரியும் சடலங்களாக மீட்கப்பட்டனர். அவர்களின் உடல்களில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டு...

இணையவுள்ளன என்றும் கூறப்படுகிறது.

அரசாங்கத்துக்கு எதிரான இந்த பேரணியை ஏற்பாடு செய்வது குறித்து அரசியல் கட்சிகளுக்கு இடையே கலந்துரையாடல்கள் நடைபெற்று வரு கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 12வயது...

அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

12 வயதுக்குட்பட்ட எந்தவொரு சிறுவரும் கைபேசியை வைத்திருப்பதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ளும்.

அதிகமான திரை நேரம், தீங்கான இணைய உள்ளடக்கங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவும் அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியையும் சமூக தொடர்பாடலையும் ஊக்குவிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் - என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## ஆசிய....

முக்கியமான ஒன்றாக அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க - சீன வர்த்தக பதற்றங்களால் ஆசியா பாதிப்படைவதற்கு முக்கிய காரணமாக, ஆசிய பொருளாதார வளர்ச்சிக்கு வர்த்தகமே மையமாக இருப்பதுடன், அதன் விநியோகச் சங்கிலிக்கு சீனாவை நம்பியிருப்பதாகும் என்று ஆசிய பிராந்தியத்திற்கான தனது பொருளாதார அறிக்கையில் நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பை அதிகரிப்பது, வெளிப்புற சவால்களுக்கு எதிரான காப்பீடாக செயல்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

வர்த்தக தடைகளை நீக்குவதன் மூலம் ஆசிய நாடுகள் ஏற்றுமதிச் சந்தைகளைப் பல்வகைப்படுத்தவும் செலவுகளைக் குறைக்கவும், அமெரிக்க வரி விதிப்புகளின் தாக்கங்களை சமாளிக்கவும் முடியும். பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் ஆசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி நடுத்தர காலத்தில் 1.4 வீதம் வரை அதிகரிக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது நீடிக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்துள்ளது. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்த கட்டமைப்புச் சீர்திருத்தங்களை அமுல்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது. இந்தச் சூழலில், வர்த்தக தடைகள் நீக்கப்படுவது பற்றிய நாணய நிதியத்தின் ஆலோசனை, இலங்கையின் சீர்திருத்த முயற்சிகளுக்கு நேரடியாகப் பொருந்துகிறது.

இலங்கையின் ஆடைத் துறை போன்ற முக்கிய ஏற்றுமதித் துறைகள் அமெரிக்காவின் வரிவிதிப்புகளால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைப்படி, இலங்கை ஆசியப் பிராந்தியத்துடனான வர்த்தகத்தை வலுப்படுத்துவதும் புதிய சந்தைகளைக் கண்டுபிடிப்பதும் அத்தியாவசியமாகிறது.

## எதிர்க்...

ஒன்றிணைந்து பயணிப்பது பற்றி பரிசீலிக்கின்றன. அது அந்தத் தரப்புகளின் சுயநல அரசியலின் வெளிப்பாடாகும்.

"நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தவேளை அவர்கள் ஒன்றிணையவில்லை. போர் நடந்த காலகட்டத்தில்கூட இணைந்து பயணிக்கவில்லை. தற்போது இணைகின்றனர் எனில் அது அவர்களின் வங்குரோத்து அரசியலை வெளிப்படுத்துகிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபைகள் தேர்தல்: சர்வகட்சி கூட்டத்தை நடத்த ஜனாதிபதி அநுர தீர்மானம்?

கொழும்பு, ஒக். 27

மாகாண சபைகள் தேர்தல் குறித்து தீர்மானிப்பதற்கு சர்வகட்சி கூட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூட்டவுள்ளார். வரவு - செலவு திட்ட உரைக்கு பின்னர் இதற்கான அறிவிப்பு வெளியாகும் என்று கூறப்படுகிறது.


இந்த நிலையில், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பிலான கலந்துரையாடல்கள் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையகத்திலும் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இதனிடையே, மாகாண சபைகள் தேர்தலை பழைய முறையின் கீழ் நடத்துவதா? அல்லது புதிய முறையின் கீழ் நடத்துவதா? என்பது குறித்து சர்வ கட்சி தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாட ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

மேலும், இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எல்லை நிர்ணயம் தொடர்பான புதிய சுற்று கலந்துரையாடல்களும் தொடங்கப்படும். அதன் பிறகு, பாராளுமன்றத்தில் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனிடையே, மாகாண சபைகள் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டால் அதற்கு எதிராக ஏதேனும் ஒரு தரப்பு உயர் திமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால், குறைந்தது இன்னும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ)

## யாழ்ப்பாணம் வந்தார் கவிஞர் வைரமுத்து



யாழ்ப்பாணம், ஒக். 27

தென்னிந்திய திரைப்பட பாடலாசிரியர் கவிப் பேரரசு வைரமுத்து உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

திரைப்படம் ஒன்றின் தொடக்க விழாவில் கலந்து கொள்ளுவதற்காகவே குறித்த குழுவினர் வருகை தந்துள்ளனர்.

## தாக்குதலில் பத்தேகம பிரதேச சபையின் உபதலைவர் காயம்!

கொழும்பு, ஒக். 27

பத்தேகம பிரதேச சபையின் உபதலைவர் சமன் சிலியனகே தாக்குதலுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பிரதேச சபை உபதலைவர் தனது மனைவியுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## சொகுசு பேருந்தின் வழித்தட உரிமம் மாதாந்தம் ரூ. 3.5 இலட்சம் இலஞ்சம்! "பெக்கோ சமன்" வாக்குமூலம்

கொழும்பு, ஒக். 27

தனக்கு சொந்தமான சொகுசு பேருந்தை மொனராகலை - கொழும்பு வீதியில் சேவையில் ஈடுபடுத்த ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் தலைவர் தம்மிடம் இருந்து மாதாந்தம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றார் என்று குற்றக்குழு உறுப்பினர் "பெக்கோ சமன்" வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதையடுத்து, குறித்த முன்னாள் தலைவரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அவர் எதிர்வரும் வாரத்தில் மேல் மாகாண வடக்கு குற்ற பிரிவுக்கு அழைக்கப்படவுள்ளார்.

தற்போது மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் "பெக்கோ சமன்", அவருக்கு சொந்தமான ரூபாய் 8 கோடிக்கும் அதிக பெறுமதியுள்ள, இரண்டு சொகுசு பேருந்துகளை கண்டுபிடிக்க கடந்த நாட்களில் குற்றப் பிரிவு அதிகாரிகளுக்கு உதவினார்.

அந்த இரண்டு பேருந்துகளில் ஒன்றை கொழும்பு - மொனராகலை வீதியில் இயக்க அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக, ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் தலைவர் ஒருவர், தம்மிடம் இருந்து மாதாந்தம் ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் கையூட்டல் பெற்றாரென அவர் கூறியுள்ளார்.

அந்த அனுமதிப்பத்திரம் கடந்த மார்ச் மாதம் காலா வதியானபோதும், "பிரச்னை ஏற்பட்டால், அதனைத் தாம் சமாளித்துக் கொள்வார் என்றும் குறித்த அதிகாரி "பெக்கோ சமன்" தரப்பினருக்கு உறுதி வழங்கினார் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், பெக்கோ சமன் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது மைத்துனர் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளார். கடந்த மாதம்கூட முன்னாள் தலைவரின் கணக்கில் குறித்த தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விமான பணிப்பெண்களை தாக்கிய சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக். 27

சவுதி அரேபியாவின் ரியாத்தில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்த சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணித்த ஒருவர், விமான பணிப்பெண்கள் இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சவுதி அரேபியாவைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. அத்துடன், அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்து, அங்கிருந்து மலேசியா செல்லத் திட்டமிட்டிருந்துள்ளார்.

விமானம், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்க தயாராகும் போது, விமானத்தில் உள்ள அனைத்து பயணிகளும் தங்களின் இருக்கை பட்டிகளை அணிந்து தங்கள் இருக்கையில் அமர வேண்டியது அவசியமாகும். சந்தேக நபர் அந்த விதியை மீறி கழிவறைக்குச் செல்ல முயன்ற நிலையில் பணிப்பெண்கள் அவரை தடுத்த போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த பணிப்பெண்கள் இது தொடர்பாக விமானிக்கு அறிவித்ததையடுத்து விமானம் தரை இறக்கிய பின்னர் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

## போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு பொலிஸ் போதாது! அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 27



போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்ப தற்கு பொலிஸ் நடவ டிக்கை மட்டும் போதாது என்று வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கிராம மட்டத்தில் உள்ள சமூகங்கள் போதைப்பொ ருள் விற்பனை மற்றும் நுகர்வை தடுக்க தீவிரமாகச் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்தில் நடைபெற்ற சிவில் சமூகத் தலைவர்களுடனான கலந்துரையாடலிலேயே வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகத்தில் நடைபெற்ற சிவில் சமூகத் தலைவர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார். (ஐ)

# வெளிநாடுகளிலுள்ள குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வருவதில் சிக்கல்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஒக். 27

போதைப்பொருள் கடத்தல் மற்றும் வியாபாரத்துடன் தொடர்புடைய இலங்கையர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்படும்போது அவர்கள் அந்த நாட்டின் குடியுரிமையை பெற்றிருந்தால் அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் சிக்கல்கள் உள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

நாட்டிலிருந்து 10இற்கும் மேற்பட்ட குற்றவாளிகள் ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அடைக்கலம் பெற்றுள்ளதால், அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதிலுள்ள சிக்கல் தொடர்பில் வெளியான செய்தி குறித்து அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஐரோப்பிய நாடுகளில் மாத்திரமின்றி மத்திய கிழக்கு நாடுகளிலும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் இருக்கின்றனர்.

டுபாய், ரஷ்யாவில் தலா ஒருவரும் இந்தியாவில் 10 முதல் 12 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான சிவப்பு அறிவித்தலை வழங்கியவுடன் அவர்களை இலங்கைக்கு அழைத்து வர முடியும்.

எனினும், சிங்கப்பூர் போன்ற நாடுகள் அந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டிருந்தால் அவர்களை அழைத்து வருவதில் பெரும் சிரமங்கள் இருக்கின்றன. மறுபுறத்தில், அந்த நாட்டில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் தவறுகள் ஏதேனும் செய்து தண்டனை பெற்றிருந்தால் அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வர முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேபோன்று, சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களை கைது செய்யும்போது அவர்களை நாட்டுக்கு அழைத்து வர முடியும். எனினும், அவர்கள் அந்த நாடுகளில் தவறுகள் செய்திருப்பதனால் அங்கு தண்டனை வழங்கப்பட்டதன் பின்னரே நீதிமன்ற நடவடிக்கை ஊடாக அவர்களை நாட்டுக்கு அழைத்து வர முடியும்.

இதேபோன்று, தவறு செய்தவர்கள் வேறு நாடுகளில் கைது செய்யப்பட்டால் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அவர் களை நாட்டுக்கு அழைத்து வர முடியும் எனினும், அதற்கு சில கால தாமதம் ஏற்படும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

## மருந்தாளர்கள் பற்றாக்குறை நெருக்கடியில் சுகாதாரதுறை

கொழும்பு, ஒக். 27

நாட்டின் மருத்துவமனைகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்தாளர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், அரச மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்கள் மருந்துகளை பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களில் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்படாததே, மருந்தாளர்களின் பற்றாக்குறைக்குக் காரணம் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியள்ளது.

தற்போது மருத்துவக் கல்வியை நிறைவு செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கின்றனர்.

இவர்களை, ஆட்சேர்ப்பு செய்வதற்கு சுகாதார அமைச்சிடம் முறையான அமைப்பு இல்லை. அத்துடன், மூன்று ஆண்டுகளாக எந்தப் பட்டதாரிகளும் ஆட்சேர்ப்பு செய்யப்பட வில்லை - என்றும் அந்தச் சங்கம் கூறியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org